முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து நேற்று (11.10.2025) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் நடைபெறும் கிராம சபைக் கூட்டத்தில் காணொலி வாயிலாக சிறப்புரை ஆற்றிய நிகழ்ச்சி கொடுமுடி ஊராட்சி ஒன்றியம், அஞ்சூர் ஊராட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் கலந்து கொண்டு பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் கொடுமுடி வட்டார வளர்ச்சி அலுவலர், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் கதிர்வேல், பொதுமக்கள் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

2026 பிப்ரவரி மாதத்திற்குள் திருக்கோயில்களில் 5 ஆண்டுகள்

தொகுப்பூதியத்தில் பணியாற்றிய 1,500 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவர்!

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, அக்.12-

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேற்று (11.10.2025) சென்னை, பிராட்வே, இராஜா அண்ணாமலை மன்றத்தில் தமிழ்நாடு திருக்கோயில் தொழிலாளர் யூனியன் சார்பில் நடைபெற்ற மாநில சிறப்பு மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாநாட்டினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

இம்மாநாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பேசியதாவது,

திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பின்னர், இந்த ஆட்சி ஆன்மிகத்திற்கும், இறையன்பர்களுக்கும் எதிரான ஆட்சி என்ற பிம்பத்தை கட்டமைக்க முயற்சித்தவர்களின் எண்ணங்களை அடித்து நொறுக்கி சுக்குநூறாக்கி, இந்த ஆட்சி எல்லோருக்குமான ஆட்சி என நிரூபித்து காட்டியவர் முதலமைச்சர் அவர்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்ற போது கொரோனா என்ற கொடிய தொற்றின் தாக்குதலிருந்து மக்களை காக்க அனைத்து அமைச்சர்களையும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்களை போல் பணியாற்ற வைத்து, கொரோனா தொற்று காலத்தில் நிவாரண உதவி வழங்குகின்ற கோப்பில் முதன்முதலில் கையெழுத்திட்டவர் நமது முதலமைச்சர் ஆவார்.

இந்த ஆட்சியின் சிறப்பையும், துறையின் சாதனைகளையும் இங்கு எல்லோரும் எடுத்து கூறினார்கள். இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் கொரோனா காலத்தில் அர்ச்சர்களுக்கு உதவித்

தொகையாக ரூ.4000/ மற்றும் ஒரு மாதத்திற்கான அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஆணுக்கு பெண் இளைப்பில்லை என்ற வரிகளுக்கேற்ப இந்த அரசு பொறுப்பேற்றபின் நியமிக்கப்பட்ட 46 ஓதுவார்களில் 12 பேர் பெண்கள் பெருமைக்குரியதாகும். இது தந்தை பெரியாரின் கனவு, அதை நனவாக்கி வார் வாழும் பெரியார் முதலமைச்சர் அவர்கள் என்பதை கோடிட்டு காட்ட விரும்புகின்றேன்.

இந்த ஆன்மிக ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் 3,707 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. ரூ. 8,000 கோடி மதிப்பிலான திருக்கோயில் நிலங்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டுள்ளோம். இந்து சமய அறநிலையத்துறையின் பல்வேறு திட்டங்களுக்கு இந்த ஆட்சியில் தான் ரூ. 1,200 கோடி அரசு நிதியாக வழங்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் கோயில் நிதியை அரசு பயன்படுத்திய நிலைமாறி, இந்த ஆட்சியில்தான் திருக்கோயில்களுக்கு அரசு நிதி இந்த அளவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் திருக்கோயில்களின் திருப்பணிக்கு உயதாரர்கள் மட்டும் ரூ. 1,502 கோடியை முன்வந்து அளித்துள்ளனர். இது இந்த ஆட்சியின் நேர்மைக்கும், செயல்திறனுக்கும் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. திருக்கோயில்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் பணியாற்றியவர்களை வரன்முறைப்படுத்த கடந்த ஆட்சியில் அறிவிப்பு செய்திருந்தாலும், அதனை செயல்படுத்தவில்லை. ஆனால் திராவிட மாடல் அரசின் நான்காண்டுகளில் 1,351 பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளனர். கூடுதலாக வரும் பிப்ரவரி மாதத்திற்குள் 5 ஆண்டுகள் தொகுப்பூதியத்தில் பணியாற்றியுள்ள 1,500 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்பதனை முதலமைச்சர் அவர்கள் உறுதி செய்துள்ளார்கள்.

இதுபோன்ற பல்வேறு பணியாளர்களின் மாநாடுகளில் நிறைவேற்ற வேண்டிய கோரிக்கைகள் பட்டியல் போல் நீண்டு இருக்கும். இந்து சமய அறநிலையத்துறையில் பணியாளர்கள் மன நிறைவோடு இருக்கின்றார்கள் என்பதற்கு இம்மாநாட்டு குழுவினர் அளித்து 6 கோரிக்கைகளே சாட்சியாக அமைந்துள்ளது. உங்களது கோரிக்கைகளாக யூனியனுக்கு அலுவலகம், வீட்டு வாடகைப்படி உயர்வு, திருக்கோயில்களின் வருமானத்தில் 40 சதவீதம் சம்பள செலவாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதை பொது நிதியாக ஏற்படுத்தி அதன்மூலம் திருக்கோயில் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல் போன்ற கோரிக்கைகளை துறை செயலாளர் மற்றும் ஆணையரிடம் கலந்து பேசி, முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று தீர்வு எட்டப்படும். திருக்கோயில் வருமானத்தில் பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யும் விகிதம் 20 சதவீதம் என்று இருந்ததை இந்த அரசு பொறுப்பேற்றபின் அந்தந்த திருக்கோயில்களின் செலவினத்திற்கு ஏற்றாற்போல் 25 முதல் 35 சதவீதம் வரை உயர்த்தியுள்ளோம். எந்த ஒரு பணியா ளரும் பணிக்கேற்ற ஊதியம் இல்லாமல் பணியாற்றமாட்டார்கள் என்ற உறுதியை வழங்குகின்றேன்.

பைபிளில் கூறப்பட்டுள்ள கேளுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்ற வரிகளுக்கேற்ப கேட்காமலே கொடுக்கின்ற மனம், கேட்டதெல்லாம் தருகின்ற குணம் கொண்ட முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் இறைவனும் மகிழ்ச்சியோடு இருப்பான், இறைவனுக்கு தொண்டு செய்யும் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களும் மகிழ்ச்சியோடு இருப்பார்கள் என்று தெரிவித்தார்.

இம்மாநாட்டில் தவத்திருகுன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார், ஆன்மிக சொற்பொழிவாளர் சுகி சிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, மாநகராட்சி மண்டலக் குழுத்தலைவர் பி. ஸ்ரீராமுலு, தொழிலாளர் யூனியனின் மாநிலத் தலைவர் ஜெ.குமார், பொதுச் செயலாளர் க.இரமேஷ்குமார், நிர்வாகிகள் இரா.இரமேஷ், அ.முத்துசாமி, வி.கண்ணன், சு.தனசேகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சைதாப்பேட்டை, விருகம்பாக்கம், வேளச்சேரி, மதுரவாயல், சோழிங்கநல்லூர் ஆகிய தொகுதிகளின் பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் எஸ.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இதில் எம்.எல்.ஏ.க்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, மற்றும் க.தனசேகரன், மு.மகேஷ்குமார், பாலவாக்கம் க.சோமு, பா.அருணாச்சலம், கவிஞர் காசி முத்துமாணிக்கம், வேளச்சேரி பி. மணிமாறன், ரத்னா லோகேஸ்வரன், எம்.எஸ்.ஹரிபாபு, தொகுதி பொறுப்பாளர்கள் உமாகாந்த், பாண்டி செல்வம், சாய் ஸ்ரீகாந்த், சந்திரசேகர் , மாவட்ட நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், உள்ளிட்ட இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், பிற அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ தலைமை! கே.ஏழுமலை எம்.சி - கோ.சு.மணி முன்னிலை!

தியாகராயர்நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

ஆ.இராசா எம்.பி - அமைச்சர் மா.சுப்பிரமணியன் - மயிலை த.வேலு எம்.எல்.ஏ - தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, சிறப்புரை!

சென்னை, அக். 12 --

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட கழக நிர்வாகிகள், பாகப் பொறுப்பாளர்கள், BLA-2, BDA நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (12.10.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு, கோடம்பாக்கம், பவர் ஹவுஸ், அன்னை அஞ்சுகம் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர், தியாகராயர் நகர் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி தலைமை வகிக்கிறார்.

தியாகராயர் நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி, அமைச்சர் மா.சுப்பிரமணியன், மாவட்டக் கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராயர் நகர் தொகுதிப் பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி, ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எனவே தியாகராயர் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், இந்நாள் - முன்னாள் கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ந.மோ. முரளி, கே.எஸ்.வெல்டிங் ராஜா, வடபழனி டி.கமல், தட்சன் ஹரிஹரன், பி.ஜெய்குமார், தி.நகர் பி.மாரி, எம்.எஸ்.பழனி, மு.செல்வகுமார், வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி, மு.ம. செந்தில்குமார், ஆர்.சக்திவேல், ஜி.பி.செந்தில்குமரன், லலிதா புரம் என்.துரை, வழக்கறிஞர் எஸ்.லட்சுமிகாந்தன் ஆகியோர் நிகழ்ச்சியின் இறுதியில் நன்றி கூறுகின்றனர்.

புத்தொழில் நிறுவன வளர்ச்சியில் சமூகநீதி காக்கும் தமிழ்நாடு!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் முதல்வருக்கு பாராட்டு!

சென்னை, அக்.12-

புத்தொழில் நிறுவன வளர்ச்சியில் சமூக நீதியை தமிழ்நாடு நிலைநாட்டியுள்ளது என முதல்வருக்கு ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்ககம் சார்பில் “உலக புத்தொழில் மாநாடு2025” கோவையில் நடந்து முடிந்துள்ளது. இம் மாநாட்டில், 39 நாடுகளை சேர்ந்த, 264 பிரதிநிதிகள் பங்கேற்றனர். 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வருகை புரிந்தனர். விண்வெளி தொழில்நுட்பம், காலநிலை மாற்ற மேலாண்மை, மின் வாகன தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புத்தொழில் நிறுவனங்கள், அரசுத்துறைகள், பெரு நிறுவனங்கள், தொழில் வளர் காப்பகங்கள் என 750 அரங்குகளுடன் புத்தொழில் கண்காட்சியும் நடத்தப்பட்டுள்ளது. இந்த மாநாட்டை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று முன்தினம் துவக்கி வைத்த கையோடு ஒரு புதிய அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார்.

அதாவது, புத்தொழில் நிறுவனங்களை மேம்படுத்த ரூ.100 கோடியில் இணை உருவாக்க நிதியம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார். இது, தங்களது சொந்த முயற்சியால் ஸ்டார்ட்அப் நிறுவனங்களை நடத்தும் இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டினை தொழில் துறையில் இந்தியாவிலேயே

தினகரன்

அக்டோபர் 11, 2025 சனிக்கிழமை

தொழில் வளர்ச்சி

தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்ககம் சார்பில் “உலக புத்தொழில் மாநாடு 2025” கோவையில் நடந்து முடிந்துள்ளது. இம்மாநாட்டில், 39 நாடுகளை சேர்ந்த, 264 பிரதிநிதிகள் பங்கேற்றனர். 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வருகை புரிந்தனர். விண்வெளி தொழில்நுட்பம், காலநிலை மாற்ற மேலாண்மை, மின் வாகன தொழில்நுட்பம், வேளாண் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட புத்தொழில் நிறுவனங்கள், அரசுத்துறைகள், பெரு நிறுவனங்கள், தொழில் வளர் காப்பகங்கள் என 750 அரங்குகளுடன் புத்தொழில் கண்காட்சியும் நடத்தப்பட்டுள்ளது. இந்த மாநாட்டை, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று முன்தினம் துவக்கி வைத்த கையோடு ஒரு புதிய அறிவிப்பையும் வெளியிட்டுள்ளார்.

முதன்மை மாநிலமாக உருவாக்கும் வகையில் இளைஞர்கள் புதிய தொழில்களை தொடங்கவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கு, புத்துயிர் ஊட்டி அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்தி வருகிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

அதன் ஒரு பகுதியாக இந்த உலக புத்தொழில் மாநாடு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை 2021ம் ஆண்டு வரை 2,032 ஆக மட்டுமே இருந்தது. இது, கடந்த 4 ஆண்டுகளில் 10,800 ஆக அதிகரித்துள்ளது.

அதாவது, 8,000க்கும் மேற்பட்ட புத்தொழில் நிறுவனங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன. புத்தொழில் நிறுவனங்களுக்கு தமிழ்நாடு அரசு எந்த அளவுக்கு ஊக்கம் அளித்து வருகிறது என்பதற்கு ஒரு சிறந்த உதாரணம்தான் மேற்கண்ட புள்ளிவிவரம். இதில் சுமார் 49 சதவீத நிறுவனங்கள் பெண்களால் நடத்தப்படுபவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதை தான் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கோவையில் நேற்று முன்தினம் பேசும்போது, புத்தொழில் நிறுவன வளர்ச்சியிலும் சமூக நீதி நிலைநாட்டப்பட்டுள்ளது என பெருமைப்பட கூறியுள்ளார். அடுத்ததாக, வரும் 2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்த்திட வேண்டும் என்ற தனது ஆசையை வெளிப்படுத்தி, அதற்கான இலக்கை அடைய தொடர் முயற்சி மேற்கொண்டு வருகிறார். இதன் ஒரு பகுதியாக, சென்னை, மதுரை, ஈரோடு, திருநெல்வேலி, ஓசூர், சேலம், கடலூர், தஞ்சாவூர், கோவை, திருச்சி ஆகிய 10 நகரங்களில் வட்டார புத்தொழில் மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

உலகின் முன்னணி ஸ்டார்ட்அப் மையங்களுள் ஒன்றாக தமிழகத்தை நிலைநிறுத்தவும், உலகளாவிய ஸ்டார்ட்அப் நிறுவனங்களை, தமிழக நிறு வனங்களுடன் இணைக்கவும், புதிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தி தரவும், நாட்டிலேயே முதன்முறையாக தமிழகத்தில், அதுவும் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் கோவை மாநகரில் உலக புத்தொழில் மாநாடு நடத்தி முடிக்கப்பட்டதற்கு தொழில்முனைவோர் பெரும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

உலகின் தலைசிறந்த புத்தொழில் சூழல் கொண்ட முதல் 20 இடங்களில் தமிழ்நாட்டினை கொண்டு வரவேண்டும் என்பதுதான் தமிழ்நாடு அரசின் இலக்கு. அந்த இலக்கை நோக்கிய பயணமாக இந்த புத்தொழில் மாநாடு நடந்து முடிந்துள்ளது.

இவ்வாறு ‘தினகரன்’ கூறியுள்ளது.

சென்னை மாநகராட்சி கணக்குழுத் தலைவர் க.தனசேகரன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

கலைஞர் நகரில் கலைஞர் பிறந்த நாள் விழா - நல உதவிகள் வழங்கல்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – ஈரோடு இறைவன் சிறப்புரை!

சென்னை, அக்.12-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா முன்னிட்டு விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி - தலைமை செயற்குழு உறுப்பினர். சென்னை மாநகராட்சி - நிலைக்குழு கணக்கு மற்றும் தணிக்கைக் குழுத் தலைவர் .க.தனசேகரன் ஏற்பாட்டில் கே.கே.நகர் ஏ.கே. அறக்கட்டளை அலுவலகம் அருகில் இன்று (12.10.2025 - ஞாயிறு) மாலை 5 மணிக்கு நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர். மா. சுப்பிரமணியன், தலைமைக் கழக பேச்சாளர் ஈரோடு இறைவன் ஆகியோர் வழங்கி சிறப்புரை யாற்றுகின்றனர்.

இதில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., ஏ.எம்.வி. பிரபாகர ராஜா எம்.எல்.ஏ., கவிஞர் காசிமுத்து மாணிக்கம், பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன் எம்.சி., மு.இராசா எம்.சி., தொகுதி மேலிடப் பார்வையாளர் வே.உமாகாந்த், பொதுக் குழு உறுப்பினர்கள் உதுரராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.டி.தங்கராசன், மாவட்ட துணைச் செயலாளர் வாசுகி பாண்டியன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கனிமொழி தனசேகரன், பொன்.லோகு எம்.சி., ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., நிலவரசி துரைராஜ் எம்.சி., ஆர்.சசிகுமார், நிஷா சையத், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.உமாபதி, எஸ்.ரவி, பெ. தியாகு, அ.பாபு, வடக்கு பகுதி நிர்வாகிகள் கமலக்கண்ணன், எஸ்.விஜயகுமார், சா. நாகராசன், பி.விஜயலட்சுமி, து.ரஞ்சித குமார், வட்ட கழக செயலாளர்கள் அ.கதிரே சன், சோ. செந்தில்குமார், ராஜ்.செழியன், ஆர்.பழனிச்சாமி, ஐம்பு முருகன், எஸ்.மைக்கேல், மு. கோவிந்தராசன், வி.ஏ.ராஜா, எஸ்.பாஸ்கரன், ஆர்.பாபு மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

137 அ வட்ட கழக செயலாளர்கள்- வழக்கறிஞர் கே.சதீஷ் கண்ணன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடு : ஏ.கே. கல்வி அறக்கட்டளை மகளிர்.

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

காவல் கிணறு, தனக்கர்குளம் ஆகிய ஊராட்சிகள் மாற்றியமைப்பு

தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், வள்ளியூர் தெற்கு ஒன்றியத்தில் உள்ள **“காவல் கிணறு ஊராட்சி”** இனி, வள்ளியூர் வடக்கு ஒன்றியத்திலும்;

வள்ளியூர் வடக்கு ஒன்றியத்தில் உள்ள **“தனக்கர்குளம் ஊராட்சி”** இனி, **வள்ளியூர் தெற்கு ஒன்றியத்திலும்** தொடர்ந்து செயல்படும்.

“அண்ணா அறிவாலயம்” **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 11.10.2025. தி.மு.க.

சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் BLA2, BLC, BDA, BYA ஆகியோர்களுக்கான அவரச ஆலோசனைக் கூட்டம் ஏ.காசீம் முஹம்மது தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். மாதவரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஜெ.அருண் சிறப்புரையாற்றினார். இதில் ஒன்றிய நிர்வாகிகள், கே.எம். துரைவேல், ப.சீனிவாசன். கே.வீரம்மாள், செ.அரசு, இரா.விஜயன், பா.சேகர், பொன் கோதண்டன் மற்றும் மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை சோழவரம் ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்தார்.

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்

வள்ளியூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டம், வள்ளியூர் வடக்கு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வந்த ம.கிரகாம் பெல் அவர்கள், திருநெல்வேலி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **அலெக்ஸ் அப்பாவு**, (14/90-ஏ, மெயின் ரோடு, லெப்பை குடியிருப்பு, காவல் கிணறு & அஞ்சல், இராதாபுரம் தாலுக்கா, திருநெல்வேலி மாவட்டம் - 627105) அவர்கள் வள்ளியூர் வடக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்” **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 11.10.2025. தி.மு.க.

கும்மிடிப்பூண்டி ஒன்றியம், எருக்குவாய், மங்களம், புதுபாளையம், காரணி பூண்டி ஒன்றியம், வேளாகபுரம், மாம்பாக்கம், பேரிட்டிவாக்கம், ஆனந்தேரி, கலவை ஆகிய ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை துவக்கி வைத்து மக்களின் கோரிக்கை மனுக்களை பதிவு செய்யும் செயல்முறையை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களின் தேவைகளுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு டி.ஜெ. கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வேண்டுகோள் விடுத்தார். உடன் டி.கே.சந்திரசேகர், மு.பாஸ்கரன், கோல்டுமணி, சிவய்யா, சித்தராபாபு, சுரேஷ், பாபு, தேவராஜ், கோதண்டன், அந்தோணி, துளசிராமன், அன்பு, நாராயணன், கே.வி.நாகராஜ், லிங்கேஷ், விஜியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.